# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

# 1985 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, இலங்கை போஷாக்குச் சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்

*[1985, சனவரி மாதம் 9 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1985, சனவரி மாதம் 11 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 60*

*தபாற் செலவு : சதம் 60*

# 1985 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, இலங்கை போஷாக்குச் சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்

*[1985, சனவரி மாதம் 9 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

ச. வ.—ஓ. 29/84

1659

**இலங்கை போஷாக்குச் சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்**

"இலங்கை போஷாக்குச் சங்கம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான சங்கமொன்று, அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க, சொல்லப்பட்ட சங்கத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றுவதற்கும் கொண்டுநடாத்துவதற்குமென இதன்முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் : முன்னுரை.

சொல்லப்பட்ட சங்கம் எக்குறிக்கோள்களுக்கும் கருமங்களுக்குமாகத் தாபிக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை அது வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது, 1985 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, இலங்கை போஷாக்குச் சங்க (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சங்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை போஷாக்குச் சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ள ஆட்களும், இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனையாட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "இலங்கை போஷாக்குச் சங்கம்" என்ற பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறுவழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடராலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடரவும்படலாம். அத்துடன் ,பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றுவதற்குமான முழுத் தத்துவமும் அதிகாரமும் பெற்றதாயிருத்தலும் வேண்டும். இலங்கை போஷாக்குச் சங்கத்தைக் கூட்டிணைத்தல்.

3. கூட்டுத்தாபனம் அமைக்கப்படும் பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது, அவையாவன :— கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) போஷாக்கு அறிவியல் பற்றிய கற்கையை மேம்படுத்துதல் ;

(ஆ) இலங்கையிலுள்ள போஷாக்கு அறிவியலாளர்களின் பிரதிநிதித்துவ ஒழுங்கமைப்பாகவிருத்தல் ;

(இ) தேசிய, சருவதேசிய மாநாடுகளை இலங்கையில் நடாத்துவதற்கு ஆதரவளித்தலும் அவற்றை ஒழுங்குபடுத்தலும் ;

ஏ 63846—2,800 (06/82)

(ஈ) போஷாக்கு பற்றிய அறிவினை எல்லா மட்டங்களிலும் மேம்படுத்துதலும் பரப்புதலும் ;

(உ) போஷாக்கு அறிவியலையும், போஷாக்குக் கல்வியையும் மேம்படுத்துவதற்கான நிதிகளையும், புலமைப்பரிசில்களையும் உறுதிப்படுத்தலும், ஏற்பாடுசெய்தலும், முகாமைசெய்தலும் ;

(ஊ) போஷாக்கு சம்பந்தமான கருமங்களின்மீது அரசுக்கு ஆலோசனை அளித்தல் ; அத்துடன்

(எ) மேற்கூறிய குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதன் இடைநேர்விளைவான அல்லது அவற்றுக்குகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுவான தத்துவங்கள்.

4. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதனையும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும் செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும் ; இத்தத்துவத்துள் வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பனவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப்பொறுப்பில்லாமல் பணம் கடன்பெறுவதற்கும் அல்லது திரட்டுதற்கும், கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும், சேகரிப்பதற்கும், அதன் நிதிகளை முதலீடுசெய்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவமும் அடங்கும்.

முகாமைப் பேரவை.

5. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், கூட்டுத்தாபன விதிகளுக்கிணங்கத் தெரிவுசெய்யப்பட்ட பதவிதாங்குநர்களையும் அத்தகைய எண்ணிக்கையினரான வேறு ஆட்களையும் கொண்டமைந்த முகாமைப் பேரவையொன்றினால் கூட்டுத்தாபன விதிகளுக்கமைய நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைப் பேரவை இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் பதவி வகிக்கின்றதும் இச்சட்டத்திற்கான அட்டவணையில் பெயர் குறித்துரைக்கப்பட்டுள்ளவர்களான உறுப்பினர்களைக் கொண்டமைந்ததுமான சங்கத்தின் முகாமைப் பேரவையாகவிருத்தல் வேண்டும்.

கூட்டுத்தாபன விதிகள்.

6. (1) உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் எதிலும் சமூகமளித்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் ஆகக்குறைந்தது ஐந்தில் மூன்று வாக்குக் கொண்டும், உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்ளுதல், மீளப் பெறுதல் அல்லது வெளியேற்றல் என்பனவற்றுக்காகவும், பேரவையினதும் அத்தகைய பேரவையினால் நியமிக்கப்பட்ட ஏதேனும் துணைக் குழுவினதும் கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர் என்போரினதும் கடமைகள் புரியப்படுவதற்காகவும், அலுவல்களைக் கையாளுவதில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறைக்காகவும் பொதுவில் கூட்

டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் அதன் குறிக்கோள்களை எய்தப்பெறுவதற்காகவும் இச்சட்டத்தின் நெறிகளுடனும் ஏற்பாடுகளுடனும் ஒவ்வாதனவாகவிராத விதிகளை காலத்திற்குக் காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகள் அவ்வுட்பிரிவின்கீழ் விதிகள் ஆக்கப்பட்டதுபோன்ற அதே கூட்டத்திலும் அதே முறையிலும் மாற்றப்படலாம், திருத்தப்படலாம், நீக்கப்படலாம் அல்லது அவற்றுக்கு எதுவும் சேர்க்கப்படலாம். ஆயினும் அத்தகைய மாற்றம், சேர்க்கை, திருத்தம் அல்லது நீக்கம் முகாமைப் பேரவையின் ஆகக்குறைந்தது அரைவாசி உறுப்பினராலேனும் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபன உறுப்பினர்கள் கூட்டுத்தாபன விதிகளுக்கு அமைந்தவர்களாகவிருத்தல் வேண்டும்.

சங்கத்துக்குச் செல்மதியாகவுள்ளனவும் அதற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான தனிசுகள்.

7. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் சங்கத்துக்குள்ள எல்லாத் தனிசுகளும் பொறுப்புக்களும் இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன், சொல்லப்பட்ட சங்கத்துக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும் செலுத்தப்படற்குரிய ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம் என்பது.

8. கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, மரணசாதனக் கையளிப்பு மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் பெறவும் வைத்திருக்கவும் சட்டப்படி இயலுமானதாதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும், அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைகொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள உள்ள முழுத் தத்துவத்துடனும் கூட்டுத்தாபனத்தினால் வைத்திருக்கப்படலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை எவ்விதம் பொறிக்கப்படல் வேண்டும் என்பது.

9. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, முகாமைப் பேரவையின் ஆகக்குறைந்தது இரு உறுப்பினர்களின் முன்னிலையிலல்லாது எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாதனத்தில் தமது பெயர்களைக் கையொப்பமிடுதல் வேண்டும். அவ்விதம் கையொப்பமிடுதலானது, எவரேனும் ஆள் சாட்சிக்காரராக கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

10. இச்சட்டத்தில் உள்ள எதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் குழுவினது அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவினது உரிமைகளையேனும் அல்லது இச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டவர்களும், அவர்களிலிருந்தா, அவர்கள்மூலம் அல்லது அவர்களின்கீழ் உரிமைகோருபவர்களும் தவிர்ந்த ஏனையோரினது உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

அட்டவணை [பிரிவு 5 (2)]

தலைவர் : —டாக்டர் (திருமதி) பி. வி. த மெல்

துணைத்தலைவர் : —டாக்டர் ஏ. சீ. ஏ. கவைப்

கூட்டுச் செயலாளர்கள் : —செல்வி ஜே. குணரத்ன
திருமதி பீ. எம். கருணாரத்ன

பொருளாளர் : —டாக்டர் (திருமதி) எஸ். அநுகோறல

முகாமைப் பேரவை உறுப்பினர்கள் : பேராசிரியர் (திருமதி) பி. சொய்சா
திரு. ரீ. பி. சுபசிங்க
திருமதி ஐ. துடாவ
திருமதி எஸ். ரணதுங்க
திருமதி பீ. குமாரசிங்க
திருமதி பீ. எம். குணசேகர

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.